# பத்திரிக்கைச் செய்தி

தேனி மாவட்டக் கருவூல அலகில் காலியாக உள்ள மூன்று அலுவலக உதவியாளர் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. மேற்கண்ட அலுவலக உதவியாளர் பணிக்கு குறைந்தபட்சம் 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இனசுழற்சி வரிசை அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாத இதரபிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) - 1, பொதுப் பிரிவினர் - 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) - 1. அனைத்து பிரிவினரும் 01.07.2019 அன்று குறைந்த பட்சம் 18 வயது பூர்த்தியடைந்தும், அதிக பட்சமாக ஆதிதிராவிடர், அருந்ததியினர் மற்றும் பழங்குடியினருக்கு 35 வயதும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 32 வயதும் இதர பிரிவினருக்கு 30 வயதும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்புக்கு மேல் படித்த பி.சி, எம்.பி.சி, எஸ்.சி, எஸ்.டி பிரிவினருக்கு உச்ச வயது வரம்பு ஏதுமில்லை.

மேற்காணும் பதவிகளுக்கு தகுதிபெற்ற நபர்கள் புகைப்படத்துடன், பூர்த்தி செய்த விண்ணப்பத்தை "கருவூல அலுவலர், மாவட்டக் கருவூல அலுவலகம், மாவட்ட ஆட்சியரக வளாகம், மதுரை - தேனி மெயின் ரோடு, தேனி - 625531" என்ற முகவரியில் 2019 டிசம்பர் 18 மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

இதற்கான அறிவிப்பு https://theni.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இப்பதவிக்கான விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து அதனை பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம்.

27/11/19

மாவட்ட ஆட்சித் தலைவர்,
தேனி

25.11.19.

# தேனி மாவட்டக் கருவூலத்தில் நிரப்பப்பட உள்ள அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பம்

பாஸ்போர்ட் சைஸ் போட்டோ

(சுய ஒப்பத்துடன்)

மாவட்டம் : தேனி

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | முகவரி | : | |
| 4. | கல்வித் தகுதி (பள்ளிச் சான்றிதழ்) | : | |
| 5. | பிறந்த தேதி / வயது (01.07.2019 நிலையில்) | : | |
| 6. | இருப்பிடம் (ஆதார் அட்டையில் உள்ளபடி நகல் இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 7. | சாதி சான்று (வருவாய் துறையினரால் வழங்கப்பட்ட சான்று) | : | |
| 8. | ஊனமுற்றவர் (ஆம் / இல்லை) ஆம் எனில் % (ஆதாரத்துடன்) | : | |
| 9. | மனுதாரர் ஆதரவற்ற விதவை (உரிய சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | (ஆம் / இல்லை) |
| 10. | வருவாய்த் துறையால் வழங்கப்படும் வருமானச் சான்று | | (ஆம் / இல்லை) |
| 11. | நன்னடத்தைச் சான்று | | |
| 12. | முன்னுரிமை தகுதிகள் வேறு ஏதும் இருப்பின் அதன் விபரம் | | |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மை என சான்றளிக்கப்படுகிறது.

இடம்:

நாள்: விண்ணப்பதாரர் கையொப்பம்

<u>இணைப்பு:</u> மேற்கண்டவைகளுக்கான சான்று நகல்கள்

# இனசுழற்சி

| | | |
|---|---|---|
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(முஸ்லிம் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) – பெண்கள் ஆதரவற்ற விதவை இனசுழற்சி எண்.8 | பொதுப்பிரிவினர்-பொது முன்னுரிமைஅற்றவர் இனசுழற்சி எண்.9 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்(முஸ்லிம் அல்லாத இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்) – முன்னுரிமை அற்றவர் இனசுழற்சி எண்.10 |
| 1 | 1 | பொது 1 |